செ.வெ.எண். 162 நாள்.12.03.2018.

திருநெல்வேலியில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (12.03.2018) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள். முன்னதாக, குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு வருகை தந்த மாற்றுத்திறனாளி மனுதாரர்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அவர்களது இருக்கைக்கு சென்று குறைகளை கேட்டறிந்து மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனாதையாக விட்டுச் செல்லப்பட்டு, மருத்துவமனை பராமரிப்பில் இருந்து பச்சிளம் பெண் குழந்தையை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சரணாலய குழந்தைகள் காப்பகத்தில் ஒப்படைத்தார். குழந்தைக்கு திருநெல்வேலிக்கு பெருமை சேர்க்கும் தாமிரபரணி ஆற்றினை நினைவூட்டும் வகையில் பரணி என பெயரிட்டார். இக்குழந்தை ஆலங்குளத்தில் உள்ள சரணாலாயத்தில் வளர்க்கப்பட்டு, பெற்றோர் வரவில்லை எனில் குழந்தை தத்தெடுப்பிற்கான சான்றிதழ் அளிக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.எஸ். சங்கரலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, துணை ஆட்சியர்கள் (பயிற்சி) திருமதி.மயில், செல்வி.லெட்சுமி பிரியா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.